PERIODICALS DIVISION LIBRARY

விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 13 ஷவ்வா 18 இதழ் 136

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 27-6-1986

30குருநகர் கடற்றொழிலாளர் மரணங்கள்கொலைஎன தீர்ப்பு

சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவு

[நீதிமன்ற நிருபர்]

குருநகர் கடற்றொழிலாளர் மரணவிசாரணை முடிவில் நேற்று 29சடற்றொழிலாளரின் மரணம் கொலைஎனத் தீர்ப் பளிக்கப்பட்டது. இதுவரை தகவல் எதுவும் இலாத றேமனின் மரணம் தொடர் பான விடயத்தில் தீர்ப்புத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இம்மரணவிசாரணை யாழ். மேல்நீதிமன்றத்தில் யாழ். பதில்நீதவான் கே பி. எஸ். வரதராசா முன்னிலையில்நடை பெற்றது.

இம்மாதம் 10ம் திகதி கரை வலை போடுவதற்கு தீவுப்பகு திக்கு 'தூய ஒளி' என்ற பட கில் சென்றபோது சுடப்பட் டும், வெட்டப்பட்டும் பலி யானவர்களின் மரணவிசா ரணை நேற்று முடிவடைந்தது. தீர்ப்பு வழங்கப்பட்ட 30 மர ணங்களும் தனித்தனியே கொலைஎனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

பலியான 30பேர்களில் 29-பேர் குருநகரைச் சேர்ந்த கடற்றொழிலார்களாகும். ஒரு வர் தீவுப்பகுதியைச் சேர்ந்தவ ராவார்.

இறந்தவர்களின் நலனைக் கவனிக்க சட்டத்தரணிகள் ஆர். விஸ்வநாதன் பா. தவ பாலன், ஏ அன்ரனி, எஸ். சனகசபாபதி ஆகியோர் ஆஜ ராஞர்கள்.

பொலிசார் இக்கொலைகள் தொடர்பாக தொடர்ந்து

(5ம் பக்கம் பார்க்க)

ஆயுதப் போராட்டத்தை கைவிட்டால் தீவிரவாதிகளின்கட்சிகள் அங்கீகரிக்கப்படலாம்"

பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனதிபதி

[பெஞ்சமின் இராஜரெட்ணம்]

"தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கைவிட்டு இலங்கை இனப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் பேச்சுவார்த்தைகளுக்கு உடன்பட்டு இலங் கைக்கு வந்தால் அவர்களுக்குப் பொதுமன்னிப்பு அளித்து, சாதாரணப் பிரஜைகளுக்கு வழங்கப்படும் அனைத்து உரிமைகளும் வழங்கப்படுவதுடன் அவர்களை ஜனநாயக முறையில் அங்கீகரிக் கப்பட்ட கட்சிகளாகவும் ஏற்றுக்கொள்ளலாம். அத்துடன் இரா ணுவமும் முகாமிலிருந்தே செயற்படும்".

இவ்வாறு ஜனதிபதி ஜெய வர்த்தனே கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடை பெற்ற உள்நாட்டு, வெளி நாட்டு பத்திரிகையாளர்கள் சுமார் அறுபது பேர் கலந்து கொண்ட மாநாட்டில் உரை யாற்றுகையில் கூறினர்.

ஜனதிபதி ஜெயவர்த்தனே தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இப்போதுள்ள ஆலோச னைகள் எதிர் வரும் ஆகஸ்ட் 15 ல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படடு அங்கீகா ரம் பெறப்படும். வடக்கு- கிழ க்கு இணைப்பு என்பதில் லை ஆனால் இணைப்புச் சபைகள் அல்லது மேலதிக சபைகள் பல்வேறு விடயங்களின் கீழ் அமைத்துக் கொள்ளலாம். இந்தியாவிலும் இவ் வாறான நடைமுறையுள்ளது.

"அரசாங்கக் குழுக்களின் அல்லது பாராளுமன்றக் கூட் டத்தில் இந்த ஆலோசனைகள் ஆராயப்படும் போது அர ச எம்.பீக்கள் அதற்கு எதிர்ப் புத் தெரிவிக்கலாம். ஆனால் பாராளுமன்றத்தில் இது சட் டமாக்கப்படும் பட்சத்தில் அரச கட்சி உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது. அப்படிச் செய்தால் அவர்கள் கட்சியிலிருந்து விலக் கப்படுவர். தீவிரவாதிகள் எதி ர்த்தாலும் கூட இந்த ஆலோ சனைகள் அமுல் நடத்தப்படும்.

(5ம் பக்கம் பார்க்க)

உண்மைக்கு மாறான வானொலிச் செய்தி

யாழ்ப்பாணம் வெள்ளி முன்னாள் யாழ். மாநகரசபை "பிரேத அடக்கமொன்றில் உறுப்பினரும், ஒஸ்மானியாக் கலந்துவிட்டுத் திரும்புகையில் கல் லூரி உப அதிபருமான நான்கு முஸ்லிம்கள் தமிழ்த் ஜனப் க.மு சா. ஹமீட் மேற் தீவிரவாதிகளால் கொல்லப் கண் ட வாறு தெரிவித்துள் பட்டனர் என்று இலங்கை ளார். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அவர் மேலும் தெரிவித்தி நேற்றுக்காலை அதன் செய்தி ருப்பதாவது:- ஒலிபரப்பில் வெளியிட்ட தக "இலங்கை ஒலிபரப்புக் கூட் வல் உண்மைக்கு மாறானது" டுத்தாபனத்தின் அச்செய்தி என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

முஸ்லிம்களின் கண்டன ஊர்வலம்

யாழ்ப்பாணம் வெள்ளி யாழ் முஸ்லிம் பகுதியில் நடந்த படுகொலை சம்பவத் துக்குக் கண்டனம் தெரி வித்து யாழ். முஸ்லிம் பகுதியில் சுலோக அட்டை களைத் தாங்கியவண்ணம் முஸ் லிம் சமூகத்தைச்சேர்ந்த ஆண் கள், பெண்கள். சிறுவர்கள் நீண்ட ஊர்வலமொன்றை நடாத்தினர்கள். (மா)

திருமலை நேரடி மோதலில் 10 இராணுவம் பலி

போராளி ஒருவர் வீரமரணம்

(அலுவலக நிருபர்)

திருமலை மாவட்டத்தில் நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையே மூன்று இடங்களில் நேரடிமோதல்கள் இடம்பெற் றன இம்மோதல்களின்போது 10க்கு மேற்பட்ட இராணுவத் தினர் பலியானார்கள் பலர் படுகாயமுற்றனர். விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் மரணமானார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேற்குறிப் பிட்ட விபரங்கள் தெரிவிக்கப்பட் டன.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"நேற்று [வியாழக்கிழமை] காலை 3ம் கட்டை உப்புவெளி முகாமிலிருந்தும், இறக்கம் கண்டி முகாமிலிருந்தும நடை பவனியாக இராணுவத்தினர்

(5ம் பக்கம் பார்க்க)

விஜயகுமாரணதுங்க மீண்டும் சென்னை செல்லவுள்ளார்

கொழும்பு ஜூன் 25

இலங்கை இனப் பிரச்னை சம்பந்தமாக அரசின் திட்டங் கள் குறித்து தமிழ் போராளி கள் மற்றும் இந்திய அரசியல் குழுக்களின் கருத்துக்களை அறி யும் முகமாக இலங்கை மக் கள் கட்சி பொதுச் செயலர் திரு விஜய குமாரணதுங்க மீண்டும் சென்னை செல்ல வுள்ளார்.

அடுத்த மாதம் 15 ம் திகதி அரசின் திட்டங்கள் குறித்து ஆலோசனை நடாத்துவதற்கு கூடவிருக்கும் அனைத்துக் கட சி மாநாட்டில் தமிழர் குழுக்கள் தங்கள் கருத்துக் களைத் தெரிவிக்க தனது பய ணம் உதவுமென திரு. குமா ரணதுங்க கூறியுள்ளார்.

(சிவ)

இன்று வடமராட்சியில் சிலுவை சுமக்கும் பிரார்த்தனை ஊர்வலம்

யாழ்ப்பாணம், வெள்ளி மத வேறுபாடின்றி நம்மவர் நடத்தும் சிலுவை சுமக்கும் நீண்டதூர அமைதிப் பிரார்த் தனை ஊர்வலம் இன்று வெள்

(5ம் பக்கம் பார்க்க)

மூதூர், வவனியா சம்பவங்களில் 6 இராணுவம் 16 ஊர்காவல்படை உட்பட 54 பேர் பலியானார்கள் -புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி வவனியா உலுக்குளம் புளவு வீதியில் தமது இயக்கத்தினரின் கண்ணிவெடித் தாக்குதலுக்கிலக்கான பஸ் வண்டியில் இராணுவத்தினரும், ஊர் காவல படையினரும் சிங்களக் குண்டர்களுமே பிரயாணம் செய்ததாக 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற மூன்று வெவ்வேறு கண்ணி வெடிச்சம்பவங்களில் வவனியாவிலும் மூதூரிலும் நிகழ்ந்த இரு கண்ணி வெடிச் சம்பவங்களுக்கு விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள் ளது.

இச் சம்பவங்கள் தொடர் பாக விடுதலைப் புலிகள் விடுத் துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"நேற்றுமுன்தினம் காலை மூதூர் மாவட்டத்தில் சேரு நுவரவில் ஒரு டிரக்கில் ஊர் காவல் படையினரும். சிங்கள வரும் ரோந்து சென்றுகொண் டிருந்த சமயம் எமது வீரர்கள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தியதில் டிரக் முற்றுகச் சிதைந்தது.

(5ம் பக்கம் பார்க்க)

புனித இயக்கங்களுக்கு மிகவும்

பணிவான வேண்டுகோள்

எனது ஸ்தாபனத்திற்கு பலரையைச் சேர்ந்த தரும லிங்கம் என்பவரின் 26ஸ்ரீ 6305 இலக்க நம்பர் லொறியில் கொழும்பிலிருந்து யாழ். நகருக்கு ஏற்றி வந்த பொருட்களான கைக்கோ, ஈஸ்ட், சவர்க் காரம், தீப்பெட்டி, மீன்ரின் ஆகிய பொருட்களு டன் 14-6-86 ல் விஸ்வமடு றெட்பானாவுக்கு அரு காமையில் இனந்தெரியாதவர்களினால் கடத்தப் பட்டது. இப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்களாக இருப்பதினால் பொதுமக்களின் நலன்கருதி இதில் புனித இயக்கங்கள் தலையிட்டு மீட்டுத்தந்து உதவுமாறு மிகப்பணிவுடன் கேட் டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
எஸ். வி. முருகேசு

(C-3059)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிவளம்பரம்

தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் விரைவில் எம்மால் ஆரம்பிக்கப்படவிருக்கும் எமது கிளை ஸ்தாபனத்திற்கு Office Peons, Female Clerks, Field Officer உடன் தேவை. 28-6-86 நற்சான்றிதழ்களுடன் காலை 9 மணி - மாலை 3 மணி வரை நேரில்வரவும். தொடர்பு Man Power MultiServices and Travel Consultant. 533, Stanley Road Jaffna. [C 3073]

தமிழில் கணக்கு எழுதுவதற்கு கணக்கியல் அறிவும் அனுபவமும் சிறந்த கையெழுத்தும் உள்ளவர் உடன் தேவை. விண்ணப்பிக்கவும், விள. இல:3085 C/O ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம். [C-3085]

வகுப்புகள்

108 Brown Road, Jaffna, A/L 87 சேதன இரசாயனம் ஆசிரியர் சக்தீஸ். ஆரம்பம் 30-06-86 திங்கள் 6-15 A M (திங்கள், புதன் 6-15 A M) A/L 88 புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. (திங்கள், புதன், வெள்ளி 4-45 P M) [C 3067]

புதிய தொழில் நுட்ப வகுப்புக்கள் 28-06-86ல் ஆரம்பமாகின்றன. ரேடியோ அன் ரீ.வி, எலக்றிக் வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம். பிளம்பிங், வாகனங்களுக்கான வயறிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து - அனுபவமுள்ள பொறியியலாளர்களால் கற்பிக்கப்படுகின்றன. வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்குத் துரிதமாக வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering. 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 3060)

சேவை

தரமான "போட்டோஸ்ரற்" பிரதிகள் தெளிவான "ரோனியோ" பிரதிகள், தமிழ் - ஆங்கில "ரைப்பிங்" வேலைகளுக்கு யாழ். நகரில் நாடவேண்டிய இடம்; கிளீன் கட், 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். [C-2993]

மின்விசிறி, மின்அடுப்பு, ரான்ஸ்போமர், மோட்டர், கிறைன்டர், வாஷிங்மெஷின். ஸ்ராட்டர், றிப் சுவிச் ஆகியன உத்தரவாதத்துடன் திருத்த/ றீறைண்டிங் செய்ய; ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். பழுதடைந்த மேற்குறிப்பிட்ட உபகரணங்கள் விலைக்கும் வாங்கப்படும். [A877]

சீர்வரிசை, உயர்படிப்பு, அழகு, நற்பண்பு, நயந்தளிசிதனம் இவை பலவும்கொண்ட நம் யுவதிகளுக்கு என்ஜினியர், டாக்டர், கணக்காளர் தேவை. மற்றும் பலதரப்பட்ட தொழில் வளம் கொண்ட மணமக்களின் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. விபரங்களுக்கு உங்கள் முகவரிமூலம் முத்திரை இடப்பட்ட கடித உறையினுள் விபரங்களை எழுதி அனுப்பவும். Match Makers, Man Power Multi Services, Traval Consultant, 533, Stanley Road, Jaffna. [C 3072]

விற்பனைக்கு

பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ ரூபா 250/. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C 3004)

Auto Zooming Auto Forgus Title ஆகிய தன்னியக்க வசதிகள் உடைய மிக அண்மையில் அறிமுகமான J V C. Video Camera (Model No. GX. N. 70E) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: "ரெலிகோணர், சாவகச்சேரி". C 3037)

தளபாடங்கள், வீட்டுப்பாவனைப்பொருட்கள், Harmoneyam, [ஆர்மொனியம்], குளிர்சாதனப் பெட்டி, ஹோல் செற்றி, அல்மாறி Show case, Formica சாப்பாட்டுமேசை, கதிரைகள். Tea trolly, Akai Stereo Set, Water Filter, சில்வர் கிளாஸ்வகைகள், Curtain, படுக்கைவிரிப்புகள், Bleader, Brass Stature மற்றும்பல உடன்விற்பனைக்கு. 326, Main Street, மாவடிச் சந்தி Patrics றோட்அருகில். [C3104]

பலவர்ண லவ்பேட்ஸ் (Love birds) விற்பனைக்குண்டு: தொடர்பு: இ பிரதீபன், பார்த்தீபன், 5/1 சிறும்பியடி லேன், யாழ்ப்பாணம். (மாநகர சபைக்கு அருகாமையில்) (C 3112)

யாழ்ப்பாணம்- மானிப்பாய் வீதியில் மாநகரசபை எல்லைக்குள் சகலவசதிகளுடன் 4½ பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காட்டுப் பகுதிகளிலுள்ள ஆதனங்களுடன் மாற்றமும் செய்யலாம். தொடர்பு: அம்பலவாணர், 622, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (C 3111

சேவை

தட்டச்சு இயந்திரங்கள் [Typewriters] சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். விலைக்கும் தமிழ், ஆங்கிலம், தட்டச்சு இயந்திரங்கள் வாங்கப்படும் Fudo Enterprises. 39/17 மின்சார நிலைய வீதி, (3ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம். [C 3068]

ஏல விற்பனை

பாவனைக்கு உதவாது எனக் கழிக்கப்பட்ட கீழ்வரும் பொருட்கள் 18-07-86ம் திகதி காலை 11.00மணியளவில் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை உப பணிமனை, கொக்குவில் வளவில் ஏலத்தில்விடப்படும்.

பொருட்கள்:-

வெற்றுதார் பீப்பாக்கள், கைமரங்கள் [பலன], பாவிதீராந்திகள், பழுதடைந்த தட்டச்சு எந்திரம், பழுதடைந்த கூட்டல்எந்திரம். மற்றும்பல பொருட்கள், பொருட்களை வேலைநாட்களில் உபபணிமனைவளவில்பார்வையிடலாம்.

வீ. யோகரத்தினம்,
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்
யாழ் அபிவிருத்திச்சபை,
உபபணிமனை,
கொக்குவில்.

யாழ். அபிவிருத்திச்சபை,
உப பணிமனை,
கொக்குவில். [A 876]

பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

மல்லாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் குமாரசிங்கம் பெண் சிவபாக்கியம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

சுப்பிரமணியம் குமாரசிங்கம் — கிழக்குவளவு மல்லாகம்

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 275

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1986-ம் ஆண்டு யூலை மாதம் 2ந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்பட்டலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்ற கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

1986ம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது
செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
C 3054

பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில்

கோணேர்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்துல்கனிகைம்பெண் நாகூர் உம்மாவின் மரணசாதன சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதனநியாதிக்கம் நி T/9/85

கோணேர்பண்ணை உசன் சாகிபு சாகுல்கமீது

மனுதார்

எதிர்

கோணேர்பண்ணை மீரா முகியத்தின் கைம்பெண் பாத்துமுத்து

எதிர்மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாசனத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்த நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுனதாக்கப்படலாகாதெனபதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஒப்பம்
மு. பத்மநாதன்
பதிவாளர்

27-05-86
காரணம் காட்டும் திகதி
15-07-86

ஒப்பம்
மு. பத்மநாதன்
பதிவாளர்
C 3087

பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

கரவெட்டி வடக்கு சபாரத்தினம் பெண் தங்கம்மாவின் மரணசாதனவடையமாக:
சபாரத்தினம் மகள் பத்மினி, அரசவீதி, வதிரி, கரவெட்டி.

-மனுதார்

மரணசாதன நியாயாதிக்க வழக்கிலக்கம்: T. 1242

எதிராக

1. சின்னத்தம்பி சபாரத்தினம்
2. சபாரத்தினம் நந்தகுமார்
3. சபாரத்தினம் சரவணபவான்
4. சபாரத்தினம் கமலநாதன்
5. சபாரத்தினம் மகள் யோகராணி

எல்லோரும் அரசவீதி, வதிரி, கரவெட்டி.

-எதிர்மனுதார்கள்

மேலே இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19ஆம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு ஆனி மாதம் 12ஆம் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி,

சண்முகம் நடராசா.
பதிவாளர்.

வரைவு:
வ. மகாலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி
[C-3028]

அந்தியேட்டியும் நன்றி நவிலலும்

கந்தையா ஐயாத்துரை

தோற்றம்: 15-09-1930
மறைவு: 29-05-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காயும் எமது உயர் வாழ்விற்கு வழிகாட்டியாயும் அன்பிற்கும், பாசத்திற்கும் பிறப்பிடமாயும் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வம் திடீரென எங்களை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்தாலும் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மரணச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 27-06-86 [இன்று] வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியையிலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மனைவி, பிள்ளைகள்.
மருமகள்.
சூராவத்தை,
சுன்னாகம். [C 3100]

கல்விக் கண்காட்சி

மாணவியர்களினால் உருவாக்கப்பட்ட கண்கவர் காட்சிப் பொருள்களைக் கொண்ட கல்விக் கண்காட்சி ஒன்று யாழ் திருக்குடும்பக் கன்னியர் (ஆங்கிலம்) மடத்தில் திங்கட்கிழமை (30-06-86) நடைபெறவுள்ளது.

விஞ்ஞானம், சமூகவியல், பணியியல், வர்த்தகம் போன்ற சகல பாடங்களையொட்டியும் காட்சிப் பொருள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

யாழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் அவர்கள் காலை 9-00 மணிக்கு கண்காட்சியைத் திறந்துவைப்பார். பெற்றோரும், நலன்விரும்பிகளும் இக்கண்காட்சியில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிபரும், நிர்வாகக் குழுவும்.

[C-3095]

BOND INSTITUTION,
JAFFNA.
சனி – ஞாயிறு 9-30 a.m.

A/L 87
சேதன இரசாயனம்
ஆரம்பமாகின்றது

A. மகாதேவா B. Sc.
Nagalingam Institute,
Thirunelvely.
திங்கள் – புதன் 2-30 p.m.
[C-3101]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் [redacted]

இலங்கை அகதிகளுக்கு 177 இடங்களில் முகாம்கள்!

சென்னை, ஜூன. 26

தமிழ் நாட்டில் இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கென 177 இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களுக்காக தினமும் ஒரு லட்சத்துப் பதினையாயிரம் ரூபா பணம் செலவு செய்யப்பட்டு வருவதாகவும் தமிழக மறுவாழ்வுத்துறை மந்திரி திரு. இராமசாமி தெரிவித்துள்ளார்.

நேற்று மதுரையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

கன்னியாகுமரி, சென்னை, நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்றைய எல்லா மாவட்டங்களிலும் இம்முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

முப்பதினாயிரம் அகதிகளின் நலன்களைக் கவனிக்க வேண்டியதாகவுள்ளதெனக் குறிப்பிட்ட திரு ராமசாமி, மண்டபம் முகாமில் மட்டும் தற்போது நாலாயிரத்து முப்பது பேர் இருப்பதாகக் கூறினார்.

மண்டபம் முகாமில் அகதிகளுக்காக சுமார் இரண்டு கோடி ரூபா செலவில் ஆயிரத்து இருநூறு வீடுகள் கட்டப்பட்டு வருவதாகவும் இவை அடுத்த மாதத்தில் நிறைவு பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒருவர் தவிர அனைவரும் இராஜினமா

பெங்களூர், ஜூன் 26

கர்னாடகத்தில் அமைச்சரவை மாற்றியமைப்பதற்கு வசதியாக ராமகிருஷ்ண ஹெக்டேயின் 29 அமைச்சர்களில் ஒருவர் தவிர ஏனையோர் தங்கள் ராஜினமாக்களை முதல்வரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

முதலமைச்சர் திரு. ராம கிருஷ்ண ஹெக்டே தமது அமைச்சரவையை எளிதாக மாற்றுவதற்கு வசதியாகவே இந்த இராஜினமா என்று கூறியுள்ளார்.

இலங்கை அரசின்——

புதிய யோசனைகளை ஆராய த. வி. கூ. புதுடில்லி பயணம்

[சென்னை]

இலங்கை இனப்பிரச்னை தீர்வுக்கான இலங்கையரசு இந்திய அரசிடம் அளித்துள்ள யோசனைகள் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரிகளுடன் விவாதிப்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பொலிட் பீரோ உறுப்பினர் திரு. ஆர். சம்பந்தன் ஆகியோர் நேற்று சென்னையிலிருந்து புதுடில்லிக்குப் புறப்பட்டனர்.

''இலங்கையில் அதிகாரங்களைப் பரவலாக்குதல் குறித்த யோசனைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி ''பொலிட் பீரோ'' சரியாகப் பரிசீலித்து முடிவெடுக்குமென புதுடில்லி புறப்படுமுன் சென்னை விமான நிலையத்தில் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை அரசின் இந்த யோசனைகளை விவாதிப்பதற்காக தமிழக மின்துறை அமைச்சர் திரு. எஸ் ராமச்சந்திரனை மத்திய அரசு அழைத்துள்ளது.

திரு. எஸ். ராமச்சந்திரன் இந்த யோசனைகள் தொடர்பாக மத்திய அரசு மந்திரிகளைச் சந்தித்துப் பேசுவார் என தெரியவருகிறது.

நல்லூரில் விவசாயக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் ஆதரவில், விவசாயக் கருத்தரங்கு நாளை நடைபெறவுள்ளது.

திரு. பொ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் திருவாளர்கள் க. கனகராசா, டி. குணராஜசிங்கம், கே. பரமலிங்கம், ச. கிருஷ்ணபிள்ளை, க. சத்தியானந்த சிவம், செல்வி எம். ஏ. இராசதுரை ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

மேற்படிச் சங்கத்தின் மண்டபத்தில் நாளைக் காலை 10 மணிக்கு, கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி குத்துவிளக்கேற்றி இக் கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார். (வி)

தமிழ்காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

இனப் பிரச்னை தொடர்பான அரசியற் கட்சிகளின் மாநாட்டுக்கும் தமது கட்சிக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகச் செயலாளர் திரு செ. சுந்தரலிங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

திரு. குமார் பொன்னம்பலம் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்வது என்கின்ற முடிவு காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூடி எடுத்த முடிவல்ல. இப்பேச்சுவார்த்தையில் திரு. குமார் பொன்னம்பலம் பங்கு கொள்ளும் நிலையில் இவரின் மீதும் கொழும்புக் கிளையின் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு எமது கட்சி சகல ஒழுங்குகளையும் மேற்கொள்ளும்

பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் இம்மாதம் 30-ம் திகதி திங்கட்கிழமைக்குப் பிந்தாமல் தமது பெயர்களை புன்னாலைக் கட்டுவன் ஆயர் கடவை தமிழ் கலவன் பாடசாலைக்கு சமூகந் தந்து பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர். (க)

பெயர்களைப் பதிவுசெய்க

யாழ்ப்பாணம், வெள்ளி வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து தற்காலிகமாக இடம் பெயர்ந்த மாணவர்களில் இவ்வருட ஜி. சி. ஈ. சாதாரண தரப்

தென்னபிரிக்காமீது பிரிட்டன் முறைப்படி கண்டனம்

லண்டன், ஜூன் 26

தென்னபிரிக்காவில் கடந்த இரண்டு வாரங்களுக்குமுன் அவசரகாலச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டதையடுத்து அங்கு நிலவும் பதற்றமான சூழ்நிலை குறித்து பிரிட்டன் தனது எதிர்ப்பை முறைப்படி தென்னபிரிக்காவுக்குத் தெரிவித்துள்ளது.

லண்டனிலுள்ள தென்னபிரிக்கத் தூதுவர் டாக்டர் டென்னிங் போரல் லண்டன் வெளியுறவு அமைச்சகத்திற்கு அழைக்கப்பட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் தென்னபிரிக்காவில் அமுல் செய்யப்படும் தடைகள் குறித்தும், தொழிற்சங்க மற்றும் சமுதாயத் தலைவர்கள் பரவலாக காவலில் வைக்கப்பட்டுள்ளது குறித்தும் பிரிட்டன் ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஐரோப்பிய சமுதாயத்தின் உச்சி மாநாட்டின் பின்னணியில் பிரிட்டனில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

தென்னபிரிக்க மீது பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு பிரிட்டனையும், அமெரிக்காவையும் அணிசேராநாடுகள் கேட்டுக்கொண்டபொழுது இரு நாடுகளும் இந்த வேண்டுகோளை நிராகரித்திருந்தன.

தென்னபிரிக்காவில் அமுலில் உள்ள அவசரகாலச் சட்டத்தை ரத்துச் செய்யுமாறு அமெரிக்கா ஏற்கனவே தென்னபிரிக்காவை கேட்டிருந்தபோதிலும் பிரிட்டன் தென்னபிரிக்காதொடர்பாக தனது கொள்கையிலிருந்து விலகாது என்று அறிவித்திருந்தது தெரிந்ததே.

இது இவ்வாறிருக்க பொது நலவாய தலைமைச் செயலர் டாக்டர் சிறிதத்ராம்பால் நேற்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை புதுடில்லியில் சந்தித்து தென்னபிரிக்காவின் அண்மைய நிலவரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

தென்னபிரிக்காவிற்குச் சென்றுவந்த பொதுநலவாயக் குழுவின் அறிக்கை குறித்து டாக்டர் ராம்பால் திரு ராஜீவிடம் எடுத்துக் கூறினார்.

மிசோராம் மாநில அரசு சமரச உடன்பாடு

திரிபுரா, ஜூன் 26

மிசோராம் தேசிய முன்னணியின் உறுப்பினர்கள் அனைவரையும் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுமாறு மத்திய அரசுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்ட பின் முன்னணியின் தலைவர் திரு. லால்டெங்கா கேட்டுள்ளார்.

மிசோராம்மக்கள் தங்களது பாரம்பரியம் குறித்து பெருமிதம் கொண்டுள்ளனரென்றும், அரசியல்சட்ட வரம்பிற்குள் எல்லாப் பிரச்னைகளையும் தீர்க்க முன்னணி முயன்றுள்ளது என்றும் திரு. லால் டெங்கா கூறினார்..

தங்களது நியாயமான விருப்பங்களை நிறைவேற்ற பல்வேறுஇனக்குழுக்களுக்கும் அரசியல சூழல் ஒன்று அளிக்க நமது அரசியல் சாசனம் குறிப்பிடத்தக்க ஏற்புடைய தன்மையை கொண்டிருப்பதை முன்னணிக்கும் அரசுக்கும் இனடயிலான பேச்சுக்கள் உறுதிப்படுத்துவதாக திரு. லால் டெங்கா மேலும் கூறினர்.

'உலகக் கிண்ண' உதைபந்தாட்டம்:

மே. ஜெர்மனி - ஆர்ஜன்ரீனா இறுதிப் போட்டிக்கு தெரிவு

பிரான்ஸ் தோல்வியடைந்தது!

மெக்ஸிக்கோ, ஜூன் 26

மெக்ஸிக்கோவில் நடைபெற்றுவரும் 'உலகக் கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியின், இறுதி சாம்பியன் மோதலுக்கு மே. ஜெர்மனியும், ஆர்ஜன்ரீனாவும் தெரிவு செய்யப்படடுள்ளன.

3-வது இடத்தைத் தெரிவு செய்யும் போட்டிக்கு பிரான்ஸும், பெல்ஜியமும் தெரிவாகியுள்ளன.

பிரான்ஸ் தோல்வி

இவ் ஆண்டு ஐரோப்பியச் சாம்பியன் பட்டதைப் பெற்றதும், தற்போதைய 'உலகக் கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியில் மிகவும் பலம் கொண்ட கோஷ்டியென கணிக்கப்பட்டுவந்த பிரான்ஸ் நேற்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில், மே. ஜெர்மனியிடம் தோல்வியடைந்து விட்டது.

மேற்படி போட்டியில் மே. ஜெர்மனியின் கோஷ்டி வீரர்களின் ஆட்டம் மிகச் சிறப்பாக இருந்தது. குறிப்பாக இ கோஷ்டியின் வீரர்களான ரூமனிக்கே, லிப்பாஸ்கி, லீவர், கோல்காப்பு வீரர் சூமாக்கர் ஆகியோரின் ஆட்டங்கள் குறிப்பிடத்தக்கன.

இப் போட்டியில் மே. ஜெர்மனி 2—0 கோல்களால் பிரான்ஸை தோற்கடித்தது.

ஆர்ஜன்ரீனா வெற்றி

ஆர்ஜன்ரீனாவுக்கும் பெல்ஜியத்துக்குமிடையில் [illegible] பெற்ற மற்றுமொரு அரை இறுதிப் போட்டியில் ஆர்ஜன்ரீனா 2—0 கோல்களால வெற்றி பெற்றது.

இப்போட்டியின் பிற்பகுதி ஆட்டத்திலேயே, ஆர்ஜன்ரீனாவின் காப்டன் மறடோனா இரு கோல்களையும் அடுத்தடுத்துப் போட்டார்.

மேற்படி வீரர் மறடோனா, தற்போதைய உலகப் போட்டியில் மிகக் கூடுதலான கோல்களை அடித்த வீரர் என்ற சாதனையையும் ஏற்படுத்தியுள்ளார்.

3-ம் இடத்துக்கான ஆட்டம் நாளை சனிக்கிழமையும், சாம்பியன் மோதல் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். (வி)

மூக்கில் விரலை வையுங்கள்!

கலிங்கத்துப் பரணியில்
கூழுக்கு இலக்கிய அந்தஸ்து

''யாழ். பீச் இன்ஸ்''ஹிலே
கூழுக்குத் தேசிய அந்தஸ்து

வியப்பில்லை, உண்மைதான்!
ஞாயிற்றுக் கிழமையிலே—
நம்மை நாடி வாருங்கள்,
நாம் தருவோம் ''கூழ்''

யாழ். பீச் இன்ஸ்,
பீச் ரோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அபிலாஷைகள், மயக்கங்கள், கனவுகளுடன் விளங்கும் இந்த இளமையின் அழகுதான் என்னே! எத்தனை வீச்சுடன் அது ஒளிர்கின்றது?

— லோங்பெல்லோ

நமது நோக்கு

அரசியல் கட்சி மாநாடும் அப்பாவி உயிர்களும்!

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜயவர்த்தனா தாம் கூட்டிய அரசியல் கட்சிகளின் மாநாட்டில் இலங்கை இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான அரசின் புதிய திட்டங்களின் சிலவிபரங்களை வெளியிட்டுள்ளார்.

சரியாகவோ தவறுகவோ அரசு தன் முனைப்பாக ஒரு திட்டத்தை இப்போதாகிலும் முன்வைத்திருப்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். கடந்த சர்வகட்சிமாநாட்டின் போது இருந்தநிலையைவிட அரசு இப்போது சற்று தெளிவடைந்துள்ளது என்பதையே இது காட்டுகின்றது.

இதனை தென்னிலங்கை அரசியல் சுட்சிகளும் சிங்கள மக்களும் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்போகின்றார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

புதிய திட்டத்தின் விரிவான விபரங்கள் இன்னமும் வெளிவராத நிலையில் நாம் அபிப்பிராயங்களை அவிழ்த்துவிடுவதில் அர்த்தமில்லை என்றபடியும் மேற்படி மகாநாட்டில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பியுள்ள தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ''அரசின் மாகாண சபைத்திட்டம் தமிழ்த்தேசிய இனத்தின் நியாயபூர்வமான அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றத் தவறிவிட்டது'' எனக் குறிப்பிட்டுள்ளமை கவனத்துக்குரியது.

இதற்கிடையில் அரசின் புதிய யோசனைகள் இந்திய அரசுக்கு திருப்தியளித்திருப்பதாகவே பத்தி கைச் செய்திகள் கூறுகின்றன. அரசியல் கட்சிகளின் மகாநாட்டில் ஜனாதிபதியும் கூட இந்திய பிரதம மந்திரி இத்திட்டத்தை வரவேற்றிருப்பதாக கூறியுள்ளார்.

இதேவேளை அரசின் புதிய திட்டம்பற்றி தமிழ் நாட்டிலுள்ள தமிழ்க்குழுக்களுக்கு அறிவித்து அவர்களின் கருத்துக்களை அறிவதற்கு இந்திய அரசு முயற்சி எடுத்துவருவதாகவும் அறியப்படுகின்றது.

ஏற்கனவே பல்வேறு மட்டங்களில் பேச்சுக்கள், ஒப்பந்தங்கள், வாக்குறுதிகள் என்று அகிருப்தியடைந்துள்ள தமிழினம் இப்போதைய முயற்சிகள் குறித்தும் அதிக உற்சாகம் பெற்றிருப்பதாகக் கூறமுடியாது இனிவரும் நாட்களில் இது பற்றி சாங்கோபாங்கமாக விவாதிக்கவும் விமர்சிப்பதற்கும் வாய்ப்புண்டு.

தமிழர் பிரச்னைக்குத்தீர்வு காண்பதுவே முக்கியநோக்கம் என்ற நிலையிலும் கூட இதில் சிங்களமக்கள் மத்தியில் உருவாகக்கூடிய அரசியல் கொந்தளிப்புக்களை சமாளிக்க வேண்டிய நிலையும் அரசுக்குண்டு. இதன் அடிப்படையிலேயே தமிழர் பாரம்பரியமாக வாழும் பிரதேசங்களுக்கு மட்டுமல்லாமல் முழுநாட்டிலுமே உள்ள சகலமாகாணங்களுக்கும் ஒவ்வொரு மாகாணசபை என்ற வகையில் அரசு சிந்திக்க முயன்றிருக்கிறது. ஆனால் தமிழ் மக்களே பாதிக்கப்பட்டவர்கள் என்ற நிலையில் குறித்த திட்டம் அவர்களை எங்கனம் திருப்திப்படுத்தப் போகின்றது? இது ஆய்வுக்குரியவிடயம்.

எதுவானாலும் இன்று நாட்டில் அடிக்கடி நடைபெற்றுவரும் பொதுமக்கள் பலியாகும் சம்பவங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்க இந்த அரசியல் கட்சிகளின் மகாநாடு ஒரு வழியைக் கண்டுபிடிக்குமானால்பெரும் காரியமாக இருக்கும்.

சிறிலங்கா மக்கள் கட்சியின் செயலாளர் கூறியிருப்பது போல் ராணுவகெடுபிடிகளைக் கட்டுப்படுத்துவதும் தமிழர் பிரதேசங்களிலிருந்து அப்புறப்படுத்துவதும் அமைதி முயற்சிகளுக்கு முனனேடியாக அமையமுடியும்.

சிங்களவரோ, தமிழரோ, அப்பாவிமக்கள் பலியாவதை நிறுத்த வழிகாண்பது இன்றுள்ள நிலையில் சகலருக்குமுரியதோர் கடமையாகும் இதுல் அரசாங்கம் தான் முதல் முயற்சி எடுக்க வேண்டும் என்பதைச் சொல்லவேண்டுமா?

காத்தருள்வாய் கணபதியே!

பாவலர் புகழும் விநாயகனே! ஐங்கரனே!
மேவிஅருளும் சித்தங்கேணி மகாகணபதியே!
தேவர்கள் பூஜிக்கும் தெய்வம் நீயே!
ஆவலாய் உன்னடி அடைந்தேனே அருள்வாயே!

கூவிஅழைப்பவர்க்கே கோடிவளம் தந்திடுவாய்!
குறைகளெல்லாம் தவிர்த்தே கூடும்இன்பம் நல்கிடுவாய்!
நாவில் உறைந்து இசைப்பா நாளும் படைத்திடுவாய்!
ஆனந்தமூர்த்தியே மகாகணபதியே எமைக்காத்திடுவாய்!

— கௌரி கணேஷநாதன்

(இன்று சித்தங்கேணி மகாகணபதிப் பிள்ளையார் மஹா சங்காபிஷேகம்.)

கடல்வலயச் சட்டத்தின் விலைவு

இடநெருக்கடியால் மக்கள் சுடுகாட்டில் குடியேற்றம்!

பெண்களின் உழைப்பை நம்பி வாழும் குடும்பங்கள்

குருநகர்க் கடற்கரையில் இருந்து எமது வாகனம் தேரடி கொழும்புத்துறையை அடைந்தது.

அப்பாடா ஐந்து வருடங்களில் கொழும்புத்துறையில் எத்தனை குடியேற்றங்கள் கிழக்கு முகமாகக் கடலைநோக்கி வசந்தபுரம், மணிப்புலி, உதயபுரம், கோயில்முனை ஆகிய குடியேற்றங்கள் ஏற்படுத்தப் பட்டு இருக்கின்றன.

இடுகாட்டில் குடியேற்றம்

இதில்வசந்தபுரம் ஒரு சுடலையாகும்.

கரையூர், குருநகர், பாசையூர், திட்டி ஆகிய இடங்களை ஆய்வு

களில் இடநெருக்கடி ஏற்பட்டதால் இந்தச் சுடலையிலும் மக்கள் துணிந்து குடியேறி விட்டார்கள்.

யுகதர்மம் மாறும்போது மக்கள் சுடலையில்தான் குடியேற வேண்டிவரும் என ஒரு குடிமகன் அலுத்துக் கொண்டார்.

பெண்களின் உழைப்பில் ஆண்கள்

இப்படியும் நடக்குமா என எண்ணுதீர்கள்!

கடல்வலயச் சட்டத்தால் அவுட்மோட்டர் மெஷின்கள் எல்லாம் வீட்டிலேயே தூங்குகின்றன.

பெண்கள் தும்புத்தொழில் தொடங்கி இருக்கிறார்கள். கயிறு, தும்புக்கடடை, தயாரிப்பு எல்லாம் இங்கேயே தொடங்கிவிட்டன.

கமலநாதன் என்ற கொழும்புத்துறை வாசி சொன்னார், ''நாங்கள் எல்லாரும் இன்று மானத்துடன் வாழ்வது நம்ம வீட்டுப பெண்களால் தான்'' என்றார்.

சாவித்திரி சரித்திரங்கள் மீண்டும் மறுதலிக்கும் காலம் வந்துவிட்டது என்றே தோன்றியது.

நாம் நடப்பது மெரினா பீச்சா என்று எண்ணத் தோன்றும்!

நேரே ஒரு மைல் சென்றால் பாசையூர் கடலுக்கு அப்பால் கல்முனை என்ற இடமும் தெரியும்.

பாசையூர்க் கடற்கரையிலே சில இளைஞர்கள் வள்ளத்தினைக் கரையிலே உருட்டி விட்டு அதன் மீது பழைய கணக்குகளை எழுதிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடன் நானும் ஒருவனாக மாறினேன்.

தமது பெயர்களைச் சொல்ல அவர்கள் விரும்பவில்லை. ஆனால் தமது கஷ்டங்களை மாத்திரம் முகாரி ராகத்தில் சொல்லி வைத்தார்கள்.

பாருங்கள் அண்ணை 100 யார் தூரத்தில் சிறகுவலை போட்டிருக்கின்றோம். அதிலே பட்டிருக்கும் மீன்களை எடுக்கலாம் என்றால் போக முடியா

திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

மல் இருக்கு. கடலில் இறங்கும் ஆட்களைக் கோட்டை முகாமில் இருப்பவர்கட்கு உடனே தெரியும். காட்டில் திரியும் மிருகங்கள் தண்ணீர் குடிக்க வந்தால் என்ன நிலையோ அந்த நிலையே எமக்கும்!

வள்ளங்கள் மணல் மேட்டில் ஏற்றப்பட்டு விட்டன. நாச்சிக்குடாவில் போட்ட தன் சிறகு வலையை நினைத்து ஏங்குகின்றார் ஒரு தொழிலாளி.

300 வள்ளங்கள் எஜமானர்கள் இருந்தும் அநாதரவாக நிற்கின்றன. பட்டினியால் வாடும் மக்கள் 7000. கடல் அழுதுகொண்டிருக்கின்றது!

டிக்கன்ஸ் என்ற ஆங்கிலேய எழுத்தாளர் எழுதினார். ''கடற்கரைக்கு முப்பதடி தூரத்திலே உமது பாட்டனார் முருகைக்கல் ஆகிவிட்டார்'' என்று!

நாமும் கடல்வலயச் சட்டத்தை எதிர்த்து நமக்கு நியாயம் கோராவிட்டால் பசிபட்டினியால் வாழும் நம்மவர்கள் சாம்பல் திரண்டு முருகைக் கற்களாவே மாறும் என எனக்குள் சிந்தித்துக் கொண்டேன்.

கொழும்புத்துறைக் கடல் தொழிலாளர் சங்கத்தின் முக்கியஸ்தரான திரு. கமலநாதன் அவர்களின் தரவின்படி கொழும்புத்துறையில் பாதிக்கப்பட்ட கடல்தொழில் குடும்பங்களின் எண்ணிக்கை பதினாயிரத்துக்குமேல் அடங்கும்

கொழும்புக்கு மக்களை ஏற்றி அனுப்பிய கடல் துறைமுகமான கொழும்புத்துறை ஆள் அரவம் இன்றி அடங்கிவிட்டது.

உறங்காத மதுரை எனச் சிறப்பிடம் பெறும் மதுரை மாநகரம் போல் எமது யாழ்ப்பாணம் எப்போதுவரும் என ஏங்கிக்கொண்டேன்.

பாசையூரின் பரிதாபம்

குருநகரில் இருந்து பாசையூர்ப் பக்கமாக நடந்து பாருங்கள்!

''தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' எனக் கூறிய ஜி ஜி.க்கு ஒரு சிலை.

சற்றுத்தூரம் நடவுங்கள். தமிழினத்தைத் தட்டி எழுப்பிய அறிஞர் அண்ணாவுக்கு ஓர் சிலை

பன்மொழி ஆராய்ந்த பல்கலை வேந்தன் ஞானப்பிரகாசனுருக்கு ஒரு சிலை! இன்னும் பற்பல அறிஞர் சிலைகள்!

மக்கள் கருத்து

கயிற்றசிட்டி கந்தசாமி கோயில் தர்மகர்த்தா சபை

26-6-86ந் திகதி 7ம் பக்கத்தில் ''நிர்வாகிகள்'' என்ற தலையங்கத்தின் கீழ் இரண்டாவது விடயமாகிய 'கைதடி கயிற்றசிட்டி அருள்மிகு கந்தசாமி தேவஸ்தான பரிபாலனசபை'' என்னைப் போசகராகக் கொண்டு 1-6-86ல் நியமிக்கப்பட்டுள்ளது. என்ற செய்தியைப் பார்வையிட்டேன், இத் தேவஸ்தானத்தை நிர்வகிக்க சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகளுக்கமைவாக எனது தலைமையில் ஓர் தர்மகர்த்தாசபை தெரிவு செய்யப் பெற்று பரிபாலனத்தை நடாத்தி வருகிறது. 12-6-86ல் ஆரம்பமாகி 22-6-86ல் முடிவடைந்த வருடாந்த மகோற்சவத்தையும் இத் தர்மகர்த்தா சபையே எனது மேற் பார்வையில் திறம்பட நடாத்திவைத்துள்ளதுடன் தொடர்ந்து தேவஸ்தான நிர்வாகத்தை கவனித்து வருகிறது தற்போது பதவியிலுள்ள தர்மகர்த்தாக்கள் நீதிமன்றால் அங்கீகரிக்கப் பெற்ற விதிகளின் பிரகாரம் 31-7-87 வரை பதவியிலிருக்க உரித்துடையவராவர்.

வி. கனகசபாபதி
(தலைவர்)

கைதடி கயிற்றசிட்டி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான தர்மகர்த்தாசபை

மறைந்த போராளிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம் வெள்ளி ''இன்றைய நெருக்கடியான நிலையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆயுதங்களையும் பணத்தையும் காட்டி ஆசைவார்த்தைகள் பேசி எமது போராட்டத்தைத் திசை திருப்பப் பார்க்கின்றது. எமதுபோராட்டம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் எதிரானது என்பதில் மக்கள் தெளிவாகஇருந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதிகளுக்கு எதிராகவும் எமது போராட்டத்தை முனைப்பாக்க வேண்டும்.''

இவ்வாறு கடந்த 23ம் திகதியனறு நாவற்குழி இராணுவத்தினருடன ஏற்பட்ட மோதலில் ஷெல் தாக்கி மரணமான மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த ரஞ்சனின் (கணேசதாஸ்-மட்டுவில்) இறுதி ஊர்வல அஞ்சலி உரையில் பேசுகையில் டேவிற்சன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து, களத்தில் நின்று எதிரியை எதிர்த்துப் போராடும் இயக்கங்களிடையே ஐக்கியம் என்பது மிக முக்கியமாகும். இது இல்லாவிடின் எமது எதிர்காலம் கேள்விக் குறியாகி விடும்'' என்றார்

அஞ்சலிக கூட்டத்தையடுத்து சாவகச்சேரி மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டது. ரஞ்சனின் மறைவு குறித்து சாவகச்சேரி மாவட்ட பொதுமக்கள் வெகுஜன அமைப்புக்கள் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தன [ஐ]

உற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி கொக்குவில் கிழக்கு புனித சின்னப்பர் வருடாந்தத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆரம்பமாகிறது. நாளை சனிக்கிழமை பிற்பகல் பூசை இடம்பெறும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணிக்கு விஷேச பூசைப் பலியும் அடுத்து திருச்சொரூப பவனியும் புனித ஆசீயும் இடம்பெறும். பங்குத் தந்தை அடிகளார் திரு. எவ் குலாஸ் அடிகள் திருவிழாவினை நிறைவேற்றுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறையில் 4 கப்பல்கள்

மாவிட்டபுரம் வியாழன் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு ஒரேநேரத்தில் 4 கப்பல்கள் வந்துள்ளன.

காங்கேசனதுறை சீமேந்து ஆலைக்குத் தேவையான ஜிப்சத்தை ஏற்றிக் கொண்டு ஒரு கப்பலும் இங்கிருந்து சீமெந்தையேற்றிச் செல்வதற்காக இன்னொரு கப்பலும் வந்துள்ளன. இதே நேரம் ஏற்கனவே வந்த சீனிக் கப்பலில் இருந்து சீனி இறக்கப்படவுருகிறது. இவற்றைவிட மேலும் ஒரு கப்பலும் காங்கேசன்துறைதுறை முகத்திற்கு வந்துள்ளது.

ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் துரிதமாக இடம் பெறுகின்றன.

31-ம் நாள் நினைவஞ்சலி

நாகரத்தினம் யோகேஸ்வரன் (ராசன்)

(நியூலெட்சுமி ஜுவலர்ஸ் உரிமையாளர்)

அன்னை மடியில்: 15-07-1966

ஆண்டவன் அடியில்: 29-05-86

அந்தியேட்டி: 27-06-86

சபிண்டீகரணம்: 28-06-86

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எங்கள் எல்லோரையும் பெருமை கொள்ளச் செய்துவிட்டு அரக்கர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்ட அன்புச்செல்வமே! உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம், சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பு மனைவி:
மகன் நவரூபன்,
தாய், சகோதரர்கள்,
மண்கும்பான் மேற்கு,
வேலணை.

(C 3122)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நீர்வையூர் அமரர்

மகேந்திரன் ஜெயரூபன் (ரூபன்)

ஆண்டவன் படைப்பு: 15—03—1962

அகோகடலின் பறிப்பு: 30—06—1985

(1) போராதனை வளாகச் சகாக்களோடு பிரியமாய் சுற்றுலா சென்ற நாளில் பாருங்கள் ஒன்றினிலே ஏறிநின்றே பகட்டான கிரிந்தையூர்ப்பக்கக்காட்சி ஆராத வாஞ்சையுடன் படம்பிடிக்கும் அவ்வேளை பேரலையின் உருவில் வந்தே சிரான உன் வாழ்க்கை ஒரு கணத்திற் சிதைந்ததுவோ கொடிய விதி என்ன செய்வோம்?

(2) அன்புகனி நின்னடத்தை மறக்கலாமோ? அழகுநிறை நின்னுருவை மறக்கலாமோ? இன்பநகை மொழிகளைத்தான் மறக்கலாமோ? இனியவனே செய்தவனை மறக்கலாமோ? உண்மையிலே ஜெயரூபா நீ பிரிந்து ஓராண்டு சென்றுலும் ஓயாதுள்ளம் எண்ணி யெண்ணித் தவிக்குதடா!

ஆன்மசாந்தி எய்தவுனக் கருள் புரிக,
நீர்வைக் கந்தன்.

சிவக்குமார், பாஸ்கரன், ஜீவன், கண்டி அண்ணை குடும்பத்தினர்.

[C-3108]

பிரயாண ஒழுங்குகள்

கனடா ஜேர்மனி
பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

உடனடியாக கொழும்பிலிருந்து டென்மார்க் செல்வதற்குரிய பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.

[A 729]

கடற்றொழிலாளர் மரணவிசாரணை

"படகில் துப்பாக்கிச்சூடு அடையாளங்கள் இருந்தன"

படகு உரிமையாளர் சாட்சியம்

(நீதிமன்ற நிருபர்)

"குருநகர் கடற்றொழிலாளர்களுடன் இம்மாதம் 10ம் திகதி தீவுப்பகுதிக்கு கரைவலை போடச் சென்ற என் தம்பி ரேமனைப்பற்றிய தகவல்இன்று வரை 'கிடைக்கவில்லை.

30 கடற்றொழிலாளர் மரண விசாரணையில் நேற்று முன் தினம் சாட்சியமளித்த குருநகரைச் சேர்ந்த 'தூய ஒளி' படகு உரிமையாளர் பி பிரேமன் இவ்வாறு கூறினார்

யாழ். மேல் நீதிமன்ற கட்டடத்தில் யாழ் பதில் நீதவான்கே பி. எஸ் வரதராசா முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

சட்டத்தரணிகள் ஆர் விஸ்வநாதன், ப. தவபாலன் ஆகியோர் இறந்தவர்களின் நலனைக் கவனிக்க ஆஜராஞர்.

பி. பிரேமன் மேலும் கூறியதாவது:படகில் தெழிலுக்கு சென்ற என் ஒன்றவிட்ட தம்பியை இதுவரை காணவில்லை.நூய ஒளி படகு எனக்கு சொந்தமானது அந்தப்படகில் தான் 10ம் தேதி கரைவலை போடச்சென்றார்கள்.12ம்தேதி சேதப்படுத்தப்பட்ட நிலையில் எனது படகு கொண்டுவரப் பட்டது. தீவுப்பகுதி கடற் கரையிலிருந்து மீட்கப்பட்டதுபடகுசேதமடைந்ததுடன் துப்பாக்கி சூட்டு அடையாளங்களும் காணப்பட்டன. [க]

உண்மைக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மைக்கு மாறுனது இஸ்லாமிய இளைஞர் அமைப்பு ஒன்றும் வேறுசில இளைஞர் குழுக்களுக்குமிடையே மோதல் இடம்பெற்றது. இம்மோதலிலேயே கிறேனட் வீச்சின் போது இரு இளைஞர்களும்,ஒரு மாணவனும் கொல்லப்பட்டனர் 11 பேர் காயமடைந்தனர். இவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்க, வானொலியில் தெரிவிக்கப்பட்ட தகவல் கவலைக்குரியதாகவும், ஆச்சரியமளிப்பதாகவு முள்ளது,

யாழ் குடாநாட்டிலுள்ள முஸ்லிம்களின் ஏனைய சமூகத்தவருடனான ஒற்றுமையைக் குலைக்கச் செய்வதாகவே அவ்வானொலித் தகவல் காணப்படுகிறது.

ஒரு தாய் மக்களாக வாழும் யாழ் முஸ்லிம் தமிழ் மக்களின் உறவுக்குக் குந்தகம் விளைவிப்பதாகவுள்ளது எனவே தமிழ்த் தீவிரவாதிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தில் யாழ் முஸ்லிம்கள் நால்வர் கொல்லப்பட்டனர் என்றசெய்தி உண்மைக்கு மாறுனதாகும்".

ஆயுதப்-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"எதிர்வரும் தினங்களில் நடைபெறும் பேச்சுக்களின் போது யுத்த நிறுத்தம் நீடிப்படி பற்றியும், அரசியல் அமைப்பின் அருதுது திருத்தச் சட்டமூலம்பற்றியும அது நீக்கப்படுவது பற்றியும் அரசுக்கு யோசனை தெரிவித்தால் அது குறித்தும்ஆராயப்படும். எதிர்வரும் கூட்டங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்கு கொள்ளுமென்று எதிர்பார்க்கிறோம் திம்பு பேச்சுவளில் கலந்துகொண்டதுபோல் இதிலும் கலந்துகொள்ளலாம்.

"எல்லா மாகாண சபைகளுக்காகவும் சகல மாகாணங்களிலும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும். இந்தப் புதிய ஆலோசனைகளுக்கு இந்தியாவும் ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

"மக்களையும் நாட்டையும் காக்கவேண்டியது அரசின் கடமையாகும். இதனடிப்படையில் இராணுவ நடவடிக்கைகளும், ஆட்சேர்ப்பும், ஆயுதக் கொள்வனவும் தொடர்ந்து நடைபெறும். (பி)

சிறுமி மர்மமரணம்

சம்பவம் நடந்த இடத்தை நீதவான் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம் வெள்ளி யாழ் கச்சேரியடியிலுள்ள வீடொன்றில் மர்மமான முறையில் மரணமான அராலியைச் சேர்ந்த 11வயது வேலைக்காரச் சிறுமி இராணியின் மரண விசாரணையை நடத்திய யாழ். பதில் நீதவான் கே.பி.எஸ் வரதராசா நேற்று சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டார்

யாழ் மேல் நீதிமன்றக் கட்டடத்தில், யாழ் பதில் நீதவான் கே பி.எஸ்.வரதராசா முன்னிலையில் நேற்றுக் காலை இம்மரண விசாரணை எடுக்கப் பட்டது.

மரணமான சிறுமியின் தந்தை கே. சண்முகமும் நீதிமன்றம்வந்திருந்தார். சம்பவம் நடந்த வீட்டின் பிரதம குடியிருப்பாளரும் வந்திருந்தார்

நீதவான் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிடவிருப்பதாகத் தெரிவித்தார். அங்கு நண்பகல் நீதவான் சென்று பார்வையிட்டார்.

நீதவானுடன் பிரதம குடியிருப்பாளர் நவனை சுவனிக்க ஆஜரான சட்டத்தரணிகள், யாழ். பொலிஸ் சார்ஜன்ட் கே தனபாலசிங்கம் சிறுமியின் தந்தை கே சண்முகம், அராலி மேற்கு கிராம சேவகர் கே. மயில்வாகனம் ஆகியோரும் வந்திருந்தனர்.

இம் மாதம் 30 ம் திகதி திங்கட்கிழமை காலை மரண விசாரணை தொடர்ந்து நடைபெறும். [க]

இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி சித்தன்கணி திருவருள்மிகு ஸ்ரீமஹாகணபதிப்பிள்ளையார் டஞ்சகுண்ட பக்ஷசஹிதநவோத்திர சஹஸ்ர மகா சங்காபிஷேகம்இன்று 27-ந்திகதிவெள்ளிகிழமை நடைபெறும்.

30 குருநகர்-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலன்விசாரணைசெய்து உரிய சட்டநடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிடுகிறேன் என்றும் நீதவான் தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (க)

திருமலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவந்தபோது புறையே அவ்வேத்தோட்டத்திலும், 6ம் கட்டையிலும் வைத்து எமது வீரர்கள் மோதியதில் 10 இராணுவத்தினர் வரையில் கொல்லப்பட்டதுடன் பலர் படு காயங்களுக்கு உள்ளாகினர். மேலும் இராணுவம் தனது இழப்புகளுடன் பின் வாங்கியது

"இத்தாக்குதல் சம்பவத்தின் போது எமது தரப்பில் செல்வம் வீரமரணமானார் இவருக்கு எமது வீர அஞ்சலிகள் இத்தாக்குதலானது அதிகாலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடந்தது

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் மிகுந்த புரத்தில் இருந்தும் நடைபவனியாக சாம்பல்தீவினை சுற்றி வளைப்பதற்காக இராணுவம் வந்தபோது எமது தரப்பினர் கடுமையான எதிர்த்தாக்குதல் நிகழ்த்தியதில் சில கறுப்புச் சட்டையினர் பலியானதுடன், பலர் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர் இத்தாக்குதலை எதிர் கொள்ள முடியாத கறுப்புச் சட்டையினர் பின் வாங்கினர் எமது தரப்பில் எதுவித இழப்புகளும் இல்லை." [மா]

மூதூர்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத் தாக்குதலின் போது அதில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் 6 ஊர்காவல் படையினரும் அடங்குவர். மொத்தமாக இதில் 22 பேர் வரையில் ட்ரக்கில் பயணம் செய்தது குறிப்பிடத்தக்கது.

ஒலுக்குள புகுவ வீதியில் நேற்றுமுன்னனம் பஸ்ஒன்றில் இராணுவத்தினரோடு ஊர்காவல் படையினரும் சிங்கள குண்டர்களும் வந்துகொண்டிருந்தபோது எமது வீரர்கள் இவ்வீதியில் கண்ணிவெடி தாக்குதல் நிகழ்த்தியதில் 6இராணுவத்தினரும், 10 ஊர்காவல் படையினரும், 16 சிங்கள குண்டர்களும் ஸ்தலத்திலேயே பலியாகினர் மேலும் 6 பேர் வரையில் கடுமையான காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். (மா)

சிலுவை--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு வடமராட்சிப் பகுதியில் நடைபெறவுள்ளது.

அமைதிக்குழு நடத்தும் இவ் ஊர்வலம் பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆரம்பமாகி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் முடிவடையும்

இவ்ஊர்வலம் சம்பந்தமாகச் 'செந்தமிழ் ஈழத்தில் சிந்திய இரத்தம்' என்ற தலைப்பில் பிரசுரமொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

"30 வருடங்கள் எமது ஈழநாட்டு மக்களின் ஆத்மஈடேற்றத்துக்கும், அடிப்படைப் பொருளாதார வளர்ச்சிக்கும் அளப்பரிய சேவையாற்றி 65வது வயதில் தோலசட்டி ஆசிரமத்தில் இராணுவத்தினரால் அநியாயமாகச் சுடப்பட்டுத் தன்னுயிரை தமிழீழ இலட்சியத்திக்கு ஈந்த தமிழ்நாடு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அருட் சகோதரர் வண. இமானுவேல் வெஸ்லாஸ் அடிகளாருக்கு மற்றும் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் மத வேறுபாடின்றி மனிதாபிமானத்தோடு நடாத்தப்படும் இவ்ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறும் சகலசமிழ் மக்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்ஊர்வலம் செல்லும் போது வழியில் கடையடைப்புச் செய்து கறுப்புக் கொடி பறக்கவிட்டு அனுதாபம் தெரிவிக்குமாறும் அப் பிரசுரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [மா]

வெலிங்டன்

10-30, 2-30, 6-15

மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த

விதி

(கலர் - புதிய பிரதி)

லிடோ

காலை 10-30, 2-30, 6-30

கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த

தாயில்லாமல் நானில்லை

(கலர்)

சந்தோஷ் மினி

திருநெல்வேலி

10-30, 12-30, 2-30, 4-30

Ronmarchini in THE FORGOTTEN WARRIOR

(war film — adults only)

6-30 9-00 இரவு

ராஜீவ், லட்சுமி நீதானே அந்தக் குயில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பிரயாண ஒழுங்குகள்

கனடா, டென்மார்க்

(கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம்) போக விரும்புபவர்கள் உடனடியாக எமது காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.
HOUSE MAID, CANVESSORS LABOURERS,
அரபு நாடுகளுக்கும், மலேசியாவுக்குமான பிரயாண ஒழுங்குகள் உடன்செய்து கொடுக்கப்படும்.

அத்துடன்

பாஸ்போட் (Bond) ரிக்கற்றிங்

ஆகியனவும் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

Man Power Multi Services and Travel Consultant
533, STALEY, ROAD, JAFFNA.
[C 3107]

ஓர் முக்கிய அறிவித்தல்

தோலகட்டி தயாரிப்புக்கள் நகரில் தாராளமாக கிடைக்கின்றது.
தட்டுப்பாடோ அல்லது கட்டுப்பாடோ கிடையாது.
எது எப்படியானலும் எமது தயாரிப்புக்கள் தொடர்ந்து கிடைக்கும்.
போலிகள்! கவனம்
எமது நெல்லிரச லேபலில்
ஒரு மணிக்கூட்டு கோபுரம் உண்டு
அதில் நேரம் 6–20 மணியைக் காட்டுகின்றது.
ஆகவே உன்னிப்பாக கவனித்து வாங்கவும்.
இவ் இளவேனிற் காலத்தில்
தோலகட்டி நெல்லிரசம்
உங்கள தாகத்தை நிச்சயம் பூர்த்தி செய்யும்.

செபமாலை தாசர் சபை,
தோலகட்டி, வயாவிளான்.

ஏகப் பிரதிநிதிகள்:

ஜோ. எகட்டன்,
செனித் மார்கட்டிங், யாழ்நகர்.

யாழ்நகரில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:

வரணி மிசன் விற்பனை நிலையம்,
145, நவீன சந்தை, யாழ்நகர்.
(A 753)

வடமாகாணம் புற்றுநோய்ச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

மாணவர் போட்டி

புற்றுநோய் அறிவை வளர்க்கும் நோக்கத்துடன் போட்டி ஒன்று மேற்படி சங்கத்தால் நடாத்தப்படும். முதற் பரிசு ரூபா 500/- இரண்டாம் பரிசு ரூபா 250/-, மூன்றும் பரிசு ரூபா 100/-, ஆறுதல் பரிசுகள் ஐந்து. ஒவ்வொன்றும் ரூபா 25/-. இதற்கு ஓர் எழுத்துப் பரீடசை நடாத்தப்படும். இடம், திகதி, நேரம் ஆகியன பின்னர் அறிவிக்கப்படும்.

மனுப்பத்திரங்கள் உப தலைவர், வடமாகாணப் புற்றுநோய்ச் சங்கம், 122, இராசாவின் தோட்டம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதிக்கு முன் அனுப்பப்படல் வேண்டும்.

க. பொ. த. (சாதாரணம்), க. பொ. த. (உ.த) மாணவர்கள் மாத்திரம் போட்டியில் பங்குபற்றலாம். இச்சங்க நிர்வாக சபை அங்கத்தவர்களின் பிள்ளைகள் பங்குபற்ற முடியாது.

மாதிரி மனுப்பத்திரம்

1. முழுப்பெயர்:-
2. பிறந்த திகதி:-
3. பாடசாலையின் பெயரும், முகவரியும்:-
4. வகுப்பு:-
5. வீட்டு முகவரி:-

இத்துடன் ரூபா 2/25 சதத்திற்கு உரியமுத்திரைகள் அனுப்புகின்றேன்.

திகதி:- .....1986.

.....
மனுதாரின் கையொப்பம்

மேற்காணும் பெயருடைய மனுதார் என்முன் கையொப்பமிட்டார் என உறுதிப்படுத்துகிறேன்.

.....
பாடசாலை அதிபரின் கையொப்பம்

திகதி:- .....1986.

(C 3102)

இன்றைய பலன்

மாதம்: ஆனி,
திகதி: 13 (1986-6-27) வெள்ளிக்கிழமை
நக்ஷத்திரம்- சதயம் பி. ப வரை

மேடம்:- குறுக்கு வழிகளில் இறங்கவேண்டும். வீட்டிலும் சிறு பிணி தலை தூக்கலாம் குடும்பத்தில் சுமுகமானநிலை தென்படும்.

இடபம்:- வணிகர்களுக்கு நன்மை ஆராய்ச்சியாளர்களுக்கும் புகழ் கிட்டும். குடும்ப ஒழியாலும் மனதுக்கு நிம்மதி பிறக்கும்,

மிதுனம்:- எதிர்பாராத பொருள் வரவுக்கு இடமுண்டு. தொழில் நிலையிலும் அபிவிருத்தி காணப்படும். பொறியியலாளர்கட்கு நன்மையுண்டு.

கடகம்:- கொடுக்கல் வாங்கல் பிணக்கும் தோன்றும் திடீர் பிரிவுகளும் ஏற்படலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றமுடியாமல் திண்டாடுவீர்கள்.

சிங்கம்:- புத்திக் கூர்மையால் புகழ் கிட்டும். குடும்பத்திலும் குதூகலம் தோன்றும். சிலருக்கு தலைமைப்பீடமும் கிடைக்கும்.

கன்னி:- வாய்வுக்கோளாறினால் வேதனைப்படுவீர்கள். அந்நியர் பகையும் மேலோங்கி நிற்கும். தொழில் நஷ்ட்டமுமுண்டு.

துலாம்:- தந்தை வழி ஆதரவு தவறுமல் கிடைக்கும், பிரமுகர்களும் உங்களை நாடி

(8ம் பக்கம் பாரீர்)

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை
1986-ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

கீழே குறிக்கப்பட்டுள்ள சந்தைகளுக்கு 10-7-86-ந் திகதி தொடக்கம் 31-12-86-ந் திகதிவரைக்கும் கீழே குறிப்பிட்டுள்ள சந்தைக்கடைக்கு (தொடர்ச்சியாக வாடகைக்கு விடுவதற்கு) சீல் வைத்த கேள்விகள் 7-7-86-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். தேவையான விபரங்களையும், கேள்விப்பத்திரங்களையும் அந்தந்த உப அலுவலகங்களில் 4-7-86-ந் தி தி 12-00 மணவரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி யாழ் அபி. சபை செயலாளருக்கும் இணைப்பிரதி சம்பந்தப்பட்ட உப அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

உப அலுவலகம்	குத்தகையின் தன்மை	மதிப்பிட்ட தொகை
1. நல்லூர்	1. திருநெல்வேலிச் சந்தை	240,000/-
2. பண்டத்தரிப்பு பட்டினம்	1. பண்டத்தரிப்பு சந்தை	50 000/-
3. ஊர்காவற்றுறை	1. ஊர்காவற்றுறை சந்தை	15,000/-

கடைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே கேள்விப்பத்திரங்கள் சமாப்பிக்கவேண்டும்.

		மதிப்பிட்ட ஒரேமுறையில் செலுத்தும் தொகை ஒவ்வோர் கடைக்கும்
1. சுன்னாகம்	சுன்னாகம் சந்தை கிழக்குப்பக்க மேல்மாடி	70,000/-
2. சுழிபுரம்	1: புதிய கடை முன்பக்கம் இல: 1	70,000/-
	2: '' பின்பக்கம் இல: 5	50,000/-
3. புலோலி	புலோலி சந்தைக்கடைகள் 3 ஒவ்வொன்றும்	30 000/-
4. ஊர்காவற்றுறை	1: ஊர்காவற்றுறை மேல்மாடி சந்தைக்கடை	12,500/-
	2: '' சந்தைக்கடை இல: 3, 4, 5 [வருடாந்தக்கேள்வி]	1,000/-
	3: '' சந்தைக்கடை இல: 3	400/-
5. காங்கேசன்துறை	1: சந்தைக்கடை இல: 2	2,500/-
6. நெல்லியடி	இராஜ கிராமக்கடை 2	500/-

வை. மு. பஞ்சலிங்கம்,
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.

யாழ். அபி. சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 25-06-86.

(A 878)

பவர்ஸ் உரம்
இணையற்றது

A B C

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

ரூபா 2,000/- க்கும் மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் ஓராண்டு

செல்வி
இராசலிங்கம்
காயத்திரி

அன்னையிடம்:
14- 10- 1979
ஆண்டவனிடம்:
27- 06- 1985:

முதல் மழலை மோகனத்தில்
முக்குளிக்க
வைத்தவளே!
தங்கத் தங்கைக்குத்
தாழமை தந்தவளே!
பள்ளிபோய்
வருசையிலே
பாதைமாறிப்
பறந்தவளே!
பறந்தாலும்
எ நினைவில்
நீக்கமற நிறைந்தாயே!

அப்பா, அம்மா,
தங்கை வாணி,
மற்றும் உறவினர்கள்.
செ இராசலிங்கம்,
அச்சுவேலி. (C 3096)

41-ம் நாள் நினைவஞ்சலி



சின்னையா
செல்லையா

ஆண்டவன் படைப்பு:
92- 3- 1892
ஆண்டவன் அழைப்பு:
17- 5- 1986

எங்கள்குடும்ப விளக்காய் ஒளிவீசி நின்று எங்களைக் காலமெல்லாம் கண்ணின் இமைபோல் காத்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து 41 நாட்கள் என்ன 41 ஆயிரம் நாட்கள் சென்றாலும் நீங்கள் காட்டிய அன்பும், பண்பும், பாசமும் எங்கள் இதயங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
"வசந்த மகால்",
கோப்பாய். [C 3098]

கல்வி ஒழுக்கக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி வட்டுக்கோட்டை கல்வி வட்டார பெற்றோர், அதிபர், ஆசிரியர் பங்கு பற்றும் கல்வி ஒழுக்கநெறிபற்றிய கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை காலை நடைபெற்றுள்ளது. திரு. க. கயிலாயநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கு சித்தன் கேணி கணேசவித்தியாசாலையில் நடைபெறும். தொடக்க உரையை வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் ஆற்றுவார்.

மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி

திரு. கே சடாட்சரம்

[உதவி மின்
பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை]

மண்: 13-04-1945
விண்: 27-06-1983

எங்கள் குடும்பத் தலைவா!

ஆண்டுகள் மூன்று நகர்ந்தாலும் உங்கள் நினைவலைகளும் பிரிவின் துயரலைகளும் உயிருள்ள வரை எங்கள் இதயத்தில் ஒலித்துக்கொண்டேயிருக்கும். தங்கள் ஆத்மா இறைவனடி சேரப் பிரார்த்தித்து நிற்கும்:

மனைவி,
மக்கள்.

"லதா இல்லம்",
பிரதான வீதி,
தொண்டைமானாறு
(C3063)

பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்

வயாவிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமுப்பிள்ளை சந்தையா என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

இராமுப்பிள்ளைசந்தையா சைம்பெண் பரமேஸ்வரி வயாவிளான்

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. T/273

எதிராக

1. கந்தையா ஆனந்தகுமார்
2. கந்தையா விஜயகுமார்
3. கந்தையா மகள் செந்தில்நாயகி எல்லோரும் வயாவிளான்.

எதிர்வாதிகள்

மேலே உள்ள இலக்கங் கொண்டமரணசாதன வழக்கு மேலே டயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு யூலை மாதம் 2ந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

1986ம் ஆண்டு யூன் மாதம் 12ந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது

செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
C 3055

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா
(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

(30-ம் திகதி எமது முகவர் கூட்டிச் செல்வார்.)
எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ லிபியா ★ குவைத்
★ சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.

அத்துடன்
பாஸ்போட், BOND, ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேர்சல் ஏஜென்சி,
125, (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றேலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(C 3056)

பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ சவூதி அரேபியா

அ. கனடா செல்லவிரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம் எமதுமுகவர் உங்களை கனடா வரை அழைத்துச் செல்வார். செல்லவிரும்புவோர் யூலை 5ம் திகதிக்கு பிந்தாமல் தொடர்பு கொள்ளவும்.

ஆ. டென்மார்க்குக்கு எமது முகவர் வாரத்திற்கு ஒரு தடவை உங்களை அழைத்துச் செல்வார் செல்ல விரும்புவோர் உடன் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

இ. சவூதி அரேபியாவுக்கு (Labour) தொழிலாளர்களை உடன் தேவை. செல்லவிரும்புவோர் 5-ம் திகதிக்குப் பிந்தாமல் தங்களது பாஸ்போட்டுடன் 6 படங்களும் கொண்டு வந்து நேரில் எமது ஸ்தாபனத்தில் சமர்ப்பித்து வெற்றிடங்களுக்கு முன்னுரிமை பெற்றுக்கொள்ளவும்.

ஈ. கனடா, டென்மார்க், ஆகிய நாடுகளுக்கான பிரயாணசேவை (Colombo) கொழும்பில் இருந்து நேரடியாக நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

யாவற்றுக்கும் தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி:

N. BALA
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(C 3088)

பிற்குறிப்பு:
(பஸ்வழி இல. 764 பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமை)

நீங்கள் டென்மார்க் செல்ல விரும்பினால்
உங்கள் ஆசனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏமாற்றம் பற்றிய பயமேயின்றி
கொழும்பிலிருந்து
நேரடிப் பயணம்

விபரங்களை நேரில் கேட்டறிக

எங்கள் சேவைகள்

★ எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
★ சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
★ Confirmations, Reconfirmations
★ பாஸ்போட், விசா, பொன்ட்
★ இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்

ரெலிபோன்-ரெலெக்ஸ்
24 மணி நேர சேவை

★ எந்த நாட்டுக்கும் துரித தொடர்பு
★ நியாயமான சரியான கட்டணம்
★ பாதுகாப்பு மிக்க இடம்
★ இரவில் தங்க, அறைவசதி
★ பாதுகாப்பான வாகனத் தரிப்பிடம்

Mack Communications & Travels
இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 24791, 24836
(A 755)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 27 6-86

கிளிநொச்சியில் இடம்பெயர்ந்த 8000 அகதி குடும்பங்களுக்கு இருவார பங்கீட்டு உணவு

யாழ்ப்பாணம், வெள்ளி

கிளிநொச்சியில் அண்மைக் காலமாக அங்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளினால் பாதிக்கப் பட்டு அகதிகளாகியுள்ள எட் டாயிரம் குடும்பங்களுக்கும் இரண்டு வாரத்திற்கான பங் கீட்டு உணவுப் பொருட்களை வழங்க அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள கோவில் களிலும், பாடசாலைகளிலும் தங்கியுள்ள கிளிநொச்சிப் பிர தேச மக்களுக்கு இதுவரைகால மும் பொது ஸ்தாபனங்களே உணவு, உடைபோன்ற உதவி களைச் செய்துவருகின்றன

கிளிநொச்சி அரசாங்க அதி பர் திரு என். ஜெயநாதன் பாதுகாப்பு அமைச்சுச் செய லாளருடனும், புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டதனை யடுத்தே இருவாரங்களுக்கான உணவுப் பொருட்களை வழங்க அனுமதி கிடைத்துள்ளதாம்.

இவ்வுணவுப் பொருட்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படுமெனத் தெரியவருகிறது.

அகதிகளாகக் கோவில்களில், பாடசாலைகளில் தங்கியுள்ள மக்கள் தமது இருப்பிடங்களுக் குச் சென்று வசித்தால்மட்டுமே பங்கீட்டு உணவுப் பொருட் களை வழங்கமுடியுமென அர சாங்கம் முன்னர் கூறிவந்தது குறிப்பிடத்தக்கது. [ஐ]

யாழ்.அநுராதபுரம் பஸ் சேவை இல்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண த்திலிருந்து காலை 6 மணிக்கு அநுராத புரம் செல்லும் வ. பி. போ. ச. பஸ் நேற்று செல்ல வில்லை.

இன்றும் இச் சேவை நடை பெறுமென்றும், யாழ்ப் பாணத்திலிருந்து வவனியா வரையுமே பஸ் செல்லும் என்றும் வ பி. போ. ச. வட் டாரங்கள் தெரிவித்தன.

மோட்டார்சைக்கிள் கடத்தப்பட்டது

சாவகச்சேரி, வியாழன்.

மக்கள் வங்கி ஊழியரான கே. கந்தசாமியின் வீட்டில் நே ற்றுமுன்தினமிரவு புகுந்த இனந்தெரியாத நபர்கள். அவ ரது மோட்டார் சைக்கிளைக் கடத்திச் சென்றனர்.

ஆஸ்பத்திரியில் இருவர் அனுமதி

சாவகச்சேரி, வியாழன்.

கெற்பேலி அகதிகள் குடி யேற்றத்திட்டத்தில் ஏற்பட்ட சிறுகலவரம் காரணமாக திட் டத்தில் வசிக்கும் இருவர் சாவ கச்சேரி அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இரண்டாந்தவணை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் மாவட்டப் பாட சாலை களுக்கான இரண்டாந் தவணைப் பொதுப் பரீட்சை யூலை முதலாந்திகதி ஆரம்ப மாகின்றது.

ஆண்டு 4 ம் வகுப்பு முதல் ஆண்டு 11 ம் வகுப்பு வரை யான மாணவர்களுக்கு 17 ந் திகதி பரீட்சை ஆரம்பமாகும்

ஆண்டு 12 ம் வகுப்புக்கு 16ந் திகதி ஆரம்பமாகும். ஆண்டு 13ம் வகுப்புக்கு யூலை முதலாந்திகதி ஆரம்பமாகும் இவ்வாறு தொண்டமனறு வெளிக்கள நிலைய பரீட்சை சபை தெரிவிக்கின்றது.

இப் பரீட்சை சமபந்தமான நேர சூசிகை சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ

இன்றைய பலன்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

வருவார்கள். கருத்தொரு மித்த காதலர் வாழ்வு சிறக்கும்.

விருச்சிகம்:- இலட்சியப் பாதையில் வீறு நடை போடு வீர்கள். அன்னிய வாசமும் உண்டு. வாகனச் சொந்தக் காரர்கட்கு நன்மையுமுண்டு.

தனுசு:- பிற பொருள்வரவு பெரியோர் ஆதரவு இவற்று டன் கடமையும் சிறக்கும் குடும்பத்திலும் புதிய ஸ்தா னம் கிடைக்கும்.

மகரம்:- பணமுடையினால் பெரிதும் வேதனைப் படுவீர் கள். ஏமாற்றம் தாக்கும். நம்பிக்கை மோசடியும் நடக் கும்.

கும்பம்:- தொழில் துறை யில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறு பிணிகளுக்கிடமுண்டு. ஆத்திர உணர்ச்சியால் மோதல்கள் ஏற்படலாம்

மீனம்:- கணவன் மனைவி உறவு பலமாக இருக்கும். காதலர்களுக்கு கனிவான தினம். இனறு கடன் தொல் லையும் நிவர்த்தியாகும். சிறப் பான தினம்.

திருமலை ரவீந்திரன்

கல்வி பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் கல்விப் பொருட்காட்சி எதிர்வரும் 30 ந் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது

இப்பொருட்காட்சியை நல் லூர் வட்டாரக்கல்வி அதி காரி திரு. சு. சிவநாயக மூர்த்தி ஆரம்பித்து வைப் பார். (ஐ

அகதிகள் வருகை அதிகரிப்பு

சாவகச்சேரி, வியாழன்.

கிளிநொச்சியில் நிலவுகின்ற பதற்றநிலை காரணமாக மேலும் பல குடும்பங்கள் நேற்றுமுன்தினம் சாவகச்சே ரிப்பகுதிக்கு அகதிகளாக வந் துள்ளன.

இம்மக்களுக்கான உதவிகளை வழங்குவதில் இப்பகுதிப் பொது அமைப்புகள் ஏற்பாடு செய்துவருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களில் வி. சே. அலுவலர்

சாவகச்சேரி வியாழன்

விசேடசேவை அலுவலர்கள் இனிமேல் கூட்டுறவுச் சங்கங் களில் பிரதிநிதித்துவம் வகிக்க லாம் என திட்ட அமுலாக்கல் அமைச்சுவிசேடசேவை அலுவ லர்களுக்கு சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளது.

முன்பு விடுக்கப்பட்ட சுற்று நிருபத்தின் பிரசாரம் விசேட சேவை அலுவலர்கள், கூட்டு றவுச்சங்கங்களில் பிரதிநிதித் துவம் வகிக்கக்கூடாது என அறிவிக்கப்பட்டது.

இதன்பின்னர், விசேட சேவை அலுவலர்கள் சங்கம் எடுத்த முயற்சியின் பேரி லேயே தற்போது இவர்களுக்கு இவ் உரிமை வழங்கப்படடுள் ளதாக அறியப்படுகின்றது.

பரிசளிப்பு பட்டமளிப்பு விழாக்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி.

அறவழிப் பாலர் கழகங் களின் பரிசளிப்புவிழாவும், பேராசிரியர் கு. நேசையாவின் பட்டமளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை மாலை கைதடி நவீல்ட் பாடசாலையில் நடை பெறும்

திரு. நேசையாவுக்கு யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் சு. வித்தியானந்தன் பட்ட மளித்து கௌரவிப்பார்.

திரு. வீ. எஸ். துரைராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பேராசிரியர் க. சிவஞானம் (நந்தி), திரு சீ. வீ. கே. சிவஞானம், மில்க் வைற் அதிபர் திரு. க. கனக ராசா, வண எஸ். சர்வா னந்தா அடிகள் உட்படப் பலர் கலந்துகொள்வார்கள். வர வேற்புரையை திரு. க. ஜீவக தாஸ் நிகழ்த்துவார். நன்றி யுரை திரு. வி ஜீ. தங்கவேல் நிகழ்த்துவார்.

நிகழ்ச்சிகளை அறவழிப் போராட்டக்குழுவினர் நடாத் தவுள்ளனர். (ஐ)

குருநகர் மீனவர் நிவாரண நிதி

யாழ்ப்பாணம், வெள்ளி

மண்டைதீவுக் கடலில் கொலையுண்ட குருநகர் மீன வர் குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக இதுவரை 64, 31 ரூபாய் பொது மக்களிட மிருந்து கிடைத்திருப்பதாக மேற்படி நிவாரண நிதிக்கு பொறுப்பாக இருக்கும் குரு நகர் கடற்றொழிலாளர் அபி விருத்திச் சங்கம் தெரிவித் துள்ளது.

ஏற்கனவே கிடைத்த 53, 105 ரூபாவுடன் மேலும் சங்கத்திடம் நிதி வழங்கியவர் களின் விபரம் வருமாறு.

விஜேய் கம்பனி குருநகர் 250/ . ஆர். எஸ். குருபரன் கொக்குவில் கிழக்கு 100/-, இணக்கசபை நாவாலி மானிப் பாய் 101/-, சிறில்ஸ் பார்மஸி பாங்சால் வீதி யாழ்ப்பாணம் 1000/-, எம். ஜெ நாதன் முதலி கோவில் வீதி அள வெட்டி 250/-, சி. நடராசா 61 புங்கங்குளம் கொழும்புத் துறை 100/ , ரஸ்ற் ரவல் சேர்விஸ் ஸ்ரான்லி ரோட் 500/-, எஸ் சிறிஸ்கந்த ராசா யாழ்ப்பாணம் 100/-, ஏ. எஸ். மகாதேவா 65 பிரதான வீதி யாழ்ப்பாணம் 250/-, எஸ் பி. அருமை நாயகம் பீ றூ குளஸ் பருத் தித்துறை 1000/- ஜி பி. ஞானேந்திரம் அராலி வடக்கு வட்டுக்கோட்டை 200/- சி நோர் ஊழியர்கள் குரு நகர் 7375/- மொத்தம் 11. 226/-.

நிவாரண உதவி வழங்கும் பொது மக்கள் செயலாளர், கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் குருநகர் என்ற முக வரிக்கோ அல்லது நேரடி யாகவோ வழங்குமாறு சங்கம் கோரியுள்ளது. [சிவ]

மண்டைதீவுக் கடலில் சடலங்கள்

மண்டைதீவு, வியாழன்.

மண்டைதீவுக் கடற்கரை யில் உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய இரண்டு சடலங்கள் பொதுமக்களால் தகனம் செய்யப்பட்டன.

செவ்வாய்க்கிழமை காலை மண்டைதீவு தெற்குக் கடற் கரைப்பகுதியில் கரையொதுங் கிய இச்சடலங்கள் அடையா ளம் காணப்படாத நிலையில் இருந்ததாகவும், இவை இரண் டும் ஆண்களின் சடலங்க ளென்றும் அறியப்படுகிறது.

'ஷெல்' தாக்குதல் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் வெள்ளி

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து 'ஷெல்' அடிக் கப்பட்டதால் காயமுற்ற பருத் தித்துறை ஆத்தியடி பிள்ளை யார் கோவிலடியைச் சேர்ந்த ரி.பூபதி [38வயது] காலில் ஏற் பட்ட காயத்தினால் யாழ் ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப் பட் டுள்ளார். [ஐ]

இன்று அலங்கார உற்சவம்

வசாவிளான் வியாழன்.

ஏழாலை இலந்தைக்கட்டி ஸ்ரீ பாதாள ஞான வைரவர் கோயில் அலங்கார உற்சவத் தின் 9ம் நாள் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறும். திருவிழாவில் ஆத்மஜோதி நா. முத்தையா 'தர்மம் தலைகாக்கும்' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49. Telegram: Eelanadu, Jaffna. Telephone 21889. 24126

வர்த்தக நிலையங்கள் நேற்றும் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கோஷ்டி மோதல்களைத் தொட ர்ந்து இரண்டாம் நாளான நேற்றும் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் வர்த்தகர்களின் வர்த் தக ஸ்தாபனங்கள் மூடப்பட் டிருந்தன. [ஐ]

பாலம் திருத்தப்பட்டது

கிளிநொச்சி வியாழன்

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலருகே கண்டி வீதியில் குண்டு வைத்துத் தகர்க்கப் பட்ட பாலம் விவசாயிகளின் உதவியுடன் திருத்தி அமைக் கப்பட்டுள்ளது,

இந்திய எதிர்ப்புப் பிரசுரங்கள்

கொழும்பு, வியாழன்

இந்தியாவிற்கு எதிரான பிர சுரங்கள் பாணந்துறையில் பொது இடங்களில் ஒட்டப்பட் டுள்ளது. (சிவ)

சென்ஜோன்ஸ் கல்லூரி முன்னாள் அதிபருக்கு நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் முன் னாள் அதிபர் அமரர் செல் லையா எட்வின் ஆனந்தராசா வின் முதலாவது ஆண்டுநினை வு தினத்தை முன்னிட்டு நேற் றுக் காலை சென். ஜோன்ஸ் கல்லூரி தேவாலயத்தில் இரங் கற் பலிபூசையை வண. எஸ். சர்வானந்தா அடிகள் நடத்தி வைத்தார். கல்லூரியின்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப் பட்டது.

தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆயர் டி. ஜே. அம்பலவாணர் ஆண்டகை ஆராதனையை ஒப்புக்கொடுத் தார்.

ஆராதனை முடிவில் திருமதி ஆனந்தராசா, சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள், ஆசிரி யர்கள் அமரர் ஆனந்தராசா வின் சமாதிக்குச் சென்று மலர் வலயம் சாத்தி அஞ்சலி செலு த்தினர்கள். ஏராளமான அன் பர்கள் இதில் கலந்துகொண்ட னர்.

அமரர் ஆனந்தராசா கல் லூரிக்கு ஆற்றிய சேவையை நினைவுகூர்ந்து மாணவர்கள் கவிதை வடிவில் பல பிரசுரங் களை வெளியிட்டிருந்தனர்.

கடந்த ஆண்டு 26ம் திகதி ஜூன் மாதம் திரு ஆனந்த ராசா துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார் என்பது தெரிந் ததே. [ஐ]

மரண அறிவித்தல்

திருமதி ஆரணி தயாபரன்

யாழ் பல்கலைக்கழகமாணவி (வணிகபீடம்2ம்வருடம்) திருமதி ஆரணி தயாபரன் அவர்கள் அகால மரண மடைந்தார். இவர் திரு. தி. தயாபரன் அவர்களின் அருமை மனைவியும், இரா.லோகநாதன் [கணக்காளர் யாழ். ப.நோ.கூ.சங்கம், தலைவர் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்], கமலாவதி ஆகியோரின் அருமை மகளும், திரு.செ.தியாகராசா(பிரதம எழுதுனர், கல் விக் கந்தோர், மன்னார்), சாரதாமணிதேவி ஆகியோ ரின் அருமை மருமகளும், வாகீசன் (யாழ். மாவட்ட ஐ நா.சங்கங்களின் சமாசம்), மாதங்கி (யாழ் இந்து மகளிர் கல்லூரி , அம்பரீசன் [யாழ் இந்துக் கல்லூரி] சாரங்கன் [யாழ் ஆ. மெ. மி. த க பாடசாலை] ஆகி யோரின் அருமைச் சகோதரியும், சுசிலாதேவி, தயா னந்தன் ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவர். அன்னரின் இறுதிக் கிரியை 19-6-86 அன்று நடைபெற் றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[C-3106] இரா. லோகநாதன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org